**கவனிக்க.**- *2010.12.31 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி (IV அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.**- *இவ்வர்த்தமானியின் பகுதி (IV அ) மற்றும் பகுதி (IV ஆ) இன சிங்கள மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகள் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1688 - 2011 ජනවාරි මස 07 වැනි සිකුරාදා - 2011.01.07
*1688 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2011, சனவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆணடு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு**

## வடமேல் மாகாண சபை அரச சேவையில் வடமேல் கைத்தறித்தொழில் திணைக்களத்திற்கு கைத்தறி ஆலோசகர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010

வடமேல் மாகாண சபை அரச சேவையில் வடமேல் கைத்தறித்தொழில் திணைக்களத்திற்கு கைத்தறி ஆலோசகர் III ஆம் தரம் பதவிக்காக ஆட்சேர்பதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடைய வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக வதியும் இலங்கை ஆண்/பெண் இருபாலாரிடத்திலிருந்தும் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. **வெற்றிட எண்ணிக்கை** - 20

2. **சம்பள முறை** :

2.1 அரச நிருவாக சுற்றுநிரூப 02/2006 (IV) - MN 1/2006 A இன் படி இந்த பதவிக்கு உரிய மாதாந்த சம்பளத்திட்டம் - ரூபா 13,120- 10 × 145 - 11 × 170 - 10 × 320 - ரூபா 22,040.

**குறிப்பு** .- 1 இந்த சம்பளத்திட்டம் அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் திருத்தங்களுக்குட்பட்டதாகும். இந்த பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் மாதாந்த சம்பளம் ரூபா 13,555 க்கு வருவதற்கு முன் வினைத்திறமைக்காண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.2 வயதெல்லை.- விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதிக்கு 18 வயதுக்கு குறையாததும் 45 வயதுக்கு அதிகரிக்காததுமாக இருத்தல் வேண்டும். தற்போது அரச/மாகாண அரச நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது. அவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை திணைக்கள தலைவரூடாக முன்வைத்தல் வேண்டும்.

2.3 சேவை நிபந்தனை.- அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பும் உயர்வு சட்டத்திட்டப்படி சேவை நிபந்தனை தீர்மானிக்கப்படும். இந்த பதவி நிரந்தரமாகும். ஓய்வூதியம் உரித்துடையதாகும். பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு தனது பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

3. **கல்வி மற்றும் வேறு தகுதிகள்** :

3.1 கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரு முறைகளுக்கு மேற்படாதவாறு சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம் உட்பட 03 விசேட சித்தியுடன் ஒரே முறையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

3.2 தொழிற் தகைமை.- அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கைத்தறி பயிற்சி நிலையம் ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று வருடம் அல்லது இரு வருடகால கடைசி சான்றிதழ் பத்திரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**க.வே**.- மேற்கூறப்பட்ட எல்லா கல்வி, தொழில் மற்றும் எல்லா தகைமையும் 2011.02.15 ஆந் தினத்திற்கு பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

4. **விண்ணப்பதாரிகள்**.-

4.1 இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

4.2 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதிக்கு 03 வருட காலம் வடமேல் மாகாண அதிகாரப்பிரிவினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (தேர்தல்கள் பெயர்பட்டியல் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்) ;

4.3 தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களாயின் அவர்/அவளின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதிக்கு 05 வருட காலத்தினுள் எவ்வித தண்டனைகளுக்கு உட்படாதிருத்தலுடன் அந்த 05 வருட காலத்தினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றிருத்தல் வேண்டும் ;

4.4 நல்லொழுக்கமுடையவராகவும் உடல் நலத்துடனும் இருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- நியமன உத்தியோகத்தரினால் தீர்மானிக்கப்படுகின்ற முறை அரச வர்த்தமானியில் (மாகாண சபை பகுதி) அல்லது பிரசித்த அறிவித்தல் விடுப்பதன் மூலம் விண்ணப்பப் படிவம் கோரப்பட்ட பின் வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு தீர்மானிக்கப்படுகின்றவாறு வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு தீர்மானிக்கப்படுகின்றவாறு வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது அதிகாரம் வழங்கப்படுகின்ற நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுப்படி அந்த பரீட்சையில் அதிக புள்ளி பெற்றவர்களின் தகுதி பரிசீலிப்பதற்காக நேர்முக பரீட்சையின் பின் கைத்தறி ஆலோசகர்கள் III தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படும். கைத்தறி ஆலோசகர்கள் III தரத்தில் வெற்றிடங்களில் 70% திறந்த போட்டிப் பரீட்சையிலும், 30% திணைக்களத்தின் ஆரம்ப தரத்தில் ஆட்சேர்ப்பிற்காக உள்வாரி போட்டிப் பரீட்சை மூலம் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் சேவையாளர்களினால் 30% பூர்த்தி செய்ய முடியாமல் போயின் மீதி வெற்றிடம் திறந்த போட்டிப் பரீட்சையினால் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*6. **பரீட்சை முறை.-***

(i)

| பாடம் | காலம் | புள்ளி |
|---|---|---|
| கைத்தறி கணிதம் | 01 மணித்தியாலம் | 100 |
| கைத்தறி குறிப்பு | 01 மணித்தியாலம் | 100 |
| கைத்தறி கைத்தொழில் பற்றிய சாதாரண அறிவு | 01 மணித்தியாலம் | 100 |
| இயந்திர வரைவு | 01 மணித்தியாலம் | 100 |

மேல் கூறப்பட்ட ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய எல்லாவற்றையும் உள்ளடக்கிய கேள்விப் பத்திரம் தயாரிக்கப்படும். ஆட்சேர்ப்பிற்காக தகுதி பெறுவது ஒவ்வொரு கேள்வி பத்திரத்திற்காக 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேலதிகமாக பெற்றிந்தால் மாத்திரமாகும்.

| | | |
|---|---|---|
| (ii) செயல் முறை பரீட்சை | 01 மணி | 100 |

இந்த செயல்முறை பரீட்சை இயந்திரம் பொறுத்துதல் மற்றும் கைதறித்தல் பற்றிய செயல்முறையினால் அறிவை அளத்தல் நடைபெறுவதுடன் உரிய துறை பற்றிய அறிவுள்ள உத்தியோகத்தர்கள் 05 பேருடனான குழுவின் முன்னிலையில் நடைபெறும்.

உரிய நேர்முகப் பரீட்சைக் குழு வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் பெற்றுள்ள உயர் அதிகாரி ஒருவர், வடமேல் கைத்தறி கைத்தொழில் மாகாண பணிப்பாளர் மற்றும் வேறு திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் ஆகியோரினால் அமைக்கப்பட்ட குழுவாக வேண்டும். கல்வி மற்றும் வேறு தகைமைகள் இங்கு பரீட்சிக்கப்படும்.

7. தற்போதைய அறிக்கைப்படி வெற்றிடம் மற்றும் வருங்காலத்தில் ஏற்படுகின்ற வெற்றிடங்கள் பரீட்சையில் சித்தியடைகின்றவர்கள் இருப்பின் அவர்களினால் நிரப்புதல் பற்றி கடைசி தீர்மானம் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானமாகும்.

8. பரீட்சைக் கட்டணமாக ரூபா 250 வடமேல் மாகாண பிரதான செயலாளரின் நிதியத்திற்கு பற்றுவரும் வகையில் அருகில் அமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் வ. ப. ச. நி. 2 பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு தவிர வேறு எவ்வித பற்று சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது. எந்த காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீள செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

*9. **விண்ணப்பிக்கும் முறை :***

09.1 இந்த அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவப்படி A 4 (செ. மீ. 21 × 29) அளவிலான கடதாசியின் இரு பக்கத்தையும் உபயோகித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2011.02.15 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, பீ நுழைவாயில், மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்பட்டு அனுப்பும் கடித உறையில் இடது மேல் மூலையில் "கைத்தறி கைத்தொழில் ஆலோசகர் III வகுப்பிற்கு ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும் (தற்போது அரச/மாகாண அரச நிரந்தர சேவையில் உள்ள விண்ணபதாரிகள் தங்களின் விண்ணப்பம் திணைக்கள தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்) காலம் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பம் எவ்வித அறிவித்தலுமின்றி நிரகாரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைத்தது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

10. விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசி திகதி - 2011.02.15 ஆகும்.

11. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுக்கு முறையற்ற விண்ப்பம் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் விண்ணப்பதாரி இந்த பதவிக்காக தகுதியுள்ளவர் என்பதற்கு ஏற்றுக்கொண்டது பற்றி எண்ணலாகாது. விண்ணப்பதாரி ஒருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து உரிய அறிவித்தல் படி தகுதி உள்ளதா என்று பரிசீலிக்கும் போது தேவையான தகுதி இல்லை என்று உறுதியாகும் சந்தர்ப்பத்தில் அவர்களின் நியமனம் கிடைக்கக்கூடிய உரிமை இரத்துசெய்யப்படும். எல்லா விண்ணப்பதாரிகளும் பதவிக்கு உரிய எல்லா தகுதியும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு அல்லது அத்தினத்திற்கு முன் பூர்த்தி செய்தல் கட்டமாயமாகும்.

12. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- தாங்கள் கலந்துக்கொள்ளும் பாடத்திற்காக விண்ணப்பதாரி தங்களின் ஆளடையாளத்தை கீழ்க் காணப்படுபவை மூலம் பரீட்சை மண்டப அதிகாரிக்கு உறுதிப்படுத்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு** .- பரீட்சை மண்டபத்தில் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு முடியாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தகுதி அற்றவர்கள் என்று கருதப்படும்.

13. எந்த விண்ணப்பதாரிக்கும் தோற்றுவதற்கான அனுமதி அட்டை பரீட்சைக்குரிய தினத்திற்கு 07 நாட்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் உடனடியாக செயலாளர், வடமேல் மாகாண சபை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல் எனும் முகவரிக்கு கீழ்க்காணும் விபரங்களை அறிவித்தல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) பரீட்சாரத்தியின் முழுப் பெயர் :
(இ) விண்ணப்பப்படிவம் அனுப்பிய முகவரி, பதிவுத்தபால் இலக்கம், தபால் அலுவலகம், திகதி.

14. எந்தவொரு பரீட்சார்த்தியும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் காணப்பட்டால் அந்தப் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தக் கட்டத்திலும் அவரது பரீட்சார்த்தி நிலை நிராகரிக்கப்படலாம். சேவையில் சேர்ந்த பின்னர் பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்கள் எவையாவது தவறானவை என்பதைத் தெரிந்துக் கொண்டே சமர்ப்பித்திருப்பது காணப்பட்டால் அவர் சேவையிலிருந்து விலக்கப்பட இடமுண்டு.

15. விண்ணப்பப்படிவம் கோருவதற்கான அறிவித்தலுடன் தொடர்புடைய விடயங்கள் அல்லது அந்த அறிவித்தலில் ஒழுங்கமைக்கப்படாத வேறு எந்த விடயம் தொடர்பிலான இறுதி தீர்மானம் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினதாகும்.

வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஏ. டீ. அமரசிறி,
செயலாளர்,
வடமேல் மாகாண சபை,
அரச சேவை ஆணைக்குழு.

2010.12.15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பரீட்சை இலக்கம் [ ]

(அலுவலக உபயோகத்திற்காக)

**வடமேல் மாகாண சபை**

வடமேல் மாகாண அரச சேவையில் வடமேல் கைத்தறித்தொழில் திணைக்களத்திற்கு கைத்தறி ஆலோசகர்
தரம் - III பதவிக்கு ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

(ஆ) முழுப்பெயர் :----.

(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | | ]

2. அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :----.

3. (i) நிரந்தர முகவரி :----.

(ii) நிரந்தரமாக வதியும் மாவட்டம் (உரிய கூட்டினுள் ✓ குறியை இடவும்)

குருநாகல் [ ] புத்தளம் [ ]

(iii) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதியாகிய 2011.02.15 ஆந் திகதிக்கு உரிய மாவட்டத்தில் நிரந்தர வதிவு :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

(iv) தொலைபேசி இலக்கம் :- சொந்த ......................... அலுவலக ...........................

4. பெண்/ஆண் (உரிய கூட்டினுள் ✓ குறியை இடவும்)
பெண் [ ] ஆண் [ ]

5. பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழி (உரிய கூட்டினுள் ✓ குறியை இடவும்.)
சிங்களம் [ ] தமிழ் [ ] ஆங்கிலம் [ ]

6. பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

(i) விண்ணப்பம் பொறுப்பேற்கப்படும் கடைசி திகதியாகிய 2011.02.15 ஆந் திகதி வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள்:----.

(ii) இலங்கை பிரசை, பிறப்பிலா அல்லது பதிவு மூலமா? :----.

7. கல்வியும் வேறு தகைமைகள் (விண்ணப்பப்படிவம் அறிவித்தல் 3.1 கீழ்)

(அ) (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையின் வருடம் :----.

(ii) பரீட்சை இலக்கம் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) அறிவித்தலுக்கு அமைய வழங்கப்பட்டுள்ள தகுதி (அறிவித்தல் இலக்கம் 3.2 கீழ் பாடநெறியை அல்லது போட்டிகளில் பெற்றுள்ள நிலை பற்றி தெளிவாக குறிப்பிடவும்) - (இந்த தகவல் தெளிவாகவும் சரியாகவும் குறிப்பிடாவிடின் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்).

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
திகதி :-----.
பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர் அலுவலகம் :----.

| பற்றுச்சீட்டினை கழறாது வண்ணம் இங்கு ஒட்டவும். |
|---|

9. ...................... ஆகிய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்கு தெரிந்த வரையில் உண்மையானதும் பிழையற்றதும் என்று அறிவிக்கின்றேன். என்னால் விடுக்கப்பட்ட இந்த கூற்று பொய்யானது என்று கண்டுபிடிக்கப்பட்டால் வடமேல் மாகாண சபையில் கைத்தறி கைத்தொழில் திணைக்களத்தில் கைத்தறி ஆலோசகர் தரம் III இற்கு நியமிப்பதற்கான என் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதையும் எனக்கு எதிராக ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படுத்துவதற்கு உள்ளாவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**

(தேவையற்ற வசனங்களை கீறிவிடவும்)

இந்த விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கின்ற ............................................ திரு./திருமதி/செல்வி ............................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும் அவர் ....................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பத்தை இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துபவரின்
கையொப்பம்

திகதி :----.

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையால் அத்தாட்சிப்படுத்தவும்)

(இந்த சான்றிதழ் அரச பாடசாலை ஒன்றின் அதிபரினால், சமாதான நீதவானால், உத்தரவு பெற்ற ஆணையாளரினால், சட்டத்தரணியினால், முப்படையின் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் அல்லது வருடத்திற்கு ரூபா 2,37,060 க்குக் குறையாத ஒன்று திரட்டப்பட்ட சம்பளத்தை பெறுகின்ற நிரந்தர பதவியையுடைய அரச/மாகாண அரச சேவை உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தல் வேண்டும்).

**தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ...................................... தற்போது .............................. அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................. பதவியில் பணியாற்றுகின்றார் என்றும் அவரின் வேலை திருப்திகரமானதென்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சான்றுப்படுத்துகின்றேன். மேலும் அவர் இப்பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் தற்போதைய பதவியின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையால் அத்தாட்சிப்படுத்தவும்)

திகதி :----.

1-145

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்**.

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்**.

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2011***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 07.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.12.2010 |
| | | வெள்ளி | 14.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.12.2010 |
| | | வெள்ளி | 21.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.01.2011 |
| | | வெள்ளி | 28.01.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.01.2011 |
| **பெப்புருவரி** | .. | வியாழன் | 03.02.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.01.2011 |
| | | வெள்ளி | 11.02.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.01.2011 |
| | | வெள்ளி | 18.02.2011 | .. | நண்பகல் 12 | வியாழன் | 03.02.2011 |
| | | வெள்ளி | 25.02.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.02.2011 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 04.03.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.02.2011 |
| | | வெள்ளி | 11.03.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.02.2011 |
| | | வெள்ளி | 18.03.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.03.2011 |
| | | வெள்ளி | 25.03.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.03.2011 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.